




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பணமில்லா பரிவர்த்தனை குறித்து பொது சேவைமைய கணினி ஊழியர்களுக்கு பயிற்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (20.01.2017) அளிக்கப்பட்டது

செ.வெ.எண்: 52/2017 நாள்: 20.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,
பணமில்லா பரிவர்த்தனை குறித்து பொது சேவை மைய
கணினி ஊழியர்களுக்கு பயிற்சி
இன்று (20.01.2017) அளிக்கப்பட்டது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பணமில்லா பரிவர்த்தனை குறித்து பொது சேவைமைய (Common Service Centre) கணினி ஊழியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் பயிற்சி இன்று (20.01.2017) அளிக்கப்பட்டது.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட தகவலியல் அலுவலர் மற்றும் மாவட்ட மின் ஆளுமை மேலாளர் ஆகியோர்களால் வங்கிகளினால் வழங்கப்படும் மொபைல் அப்ளிகேசன்(Mobile Apps) மூலம் பணமில்லா முறையில் பரிவர்த்தனை (Caseless Transaction) செய்வது குறித்து கணினி ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

பொது சேவை மையங்களில் 20-01-2017 முதல் பயோமெட்ரிக் (Biometric) முறையில் உள்ளீடு (Login) செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் வர இருக்கும் மாதங்களில் POS (Point of Sale) எந்திரம் மூலம் பணம் செலுத்தும் முறையும் பொது சேவை மையங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், மாவட்ட மின் ஆளுமை மேலாளர் திருமதி. ஷாமிலி, வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.